பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

05 03 2025 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களை உலகத் தரத்திற்கு மேம்படுத்த வேண்டியது அவசியம் என குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
2. பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் பயன்பாட்டில் இந்தியா உலகிற்கு வழிகாட்டியாக திகழ்வதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.
3. இந்தியா - இங்கிலாந்து இடையேயான பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், நேற்று இங்கிலாந்து பிரதமருடன் பேச்சுக்கள் நடத்தினார்.
4. பாகிஸ்தானில் தற்கொலைப்படை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் நான்கு குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனா.
5. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் தென்னாப்பிரிக்கா – நியுசிலாந்து அணிகள் மோதுகின்றன.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

இந்திய இளைஞர்கள் படிப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதைக் குறைக்கும் வகையில் நம் நாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களை உலத் தரத்திற்கு மேம்படுத்த வேண்டுமென குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற பல்கலைக்கழக தலைமைப் பொறுப்பாளர்கள் மாநாட்டில் நிறைவுரையாற்றிய அவர், 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வள்ச்சியடைந்த நாடாக மாற்றுவது என்ற இலக்கை அடையும் வகையில் கல்வி நிறுவனங்களும், மாணவர்களும் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்றார்.

தன்னம்பிக்கைதான் வலுவான பொருளாதாரத்தின் அடையாளம் என்று குறிப்பிட்ட அவர், ஆராய்ச்சி மற்றும் புதுமையை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தை வலுப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

அனுபவங்களின் அடிப்படையில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்த மாணவர்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டுமென்றும் குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி வேலைவாய்ப்புத்துறை சார்ந்த திட்டங்கள் குறித்த பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழி கருத்தரங்கில் இன்று பங்கேற்கிறார்.

பொருளாதாரம், புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்களில் முதலீடு ஆகியவை தொடர்பாக இந்த கருத்தரங்கில் பிரதமர் உரையாற்றவுள்ளார்.

மத்தியில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

அரசு, தொழில்துறை, கல்வி நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் பட்ஜெட் அறிவிப்புகளை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவது குறித்தும் இன்றைய கருத்தரங்கில் விவாதிக்கப்படவுள்ளது.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க நீடித்த வளர்ச்சி, தொழில்நுட்பம், திறன் மேம்பாடு, தொழிலாளர் நலன் போன்றவற்றில் கவனம் செலுத்துவது குறித்தும் இந்த கருத்தரங்கில் ஆலோசிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

அணுமின் உற்பத்தியில் தனியாரும் ஈடுபடும் வகையில் சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட உள்ளதாக மத்திய அணுசக்தித்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் கூறியுள்ளார்.

நித்தி ஆயோக் சார்பில் நடைபெற்ற இணையவழி கருத்தரங்கில் பேசிய அவர், கரியமில வாயு வெளியேற்றம் இல்லாத இந்தியாவை உருவாக்குவதில் அணுசக்தி முக்கிய பங்கு வகிக்கும் என்றார்.

2047-ஆம் ஆண்டுக்குள் நாட்டில் அணுமின் உற்பத்தியை 100 ஜிகாவாட் அளவிற்கு அதிகரிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் எரிசக்தி தேவை வரும் காலத்தில் நான்கு முதல் ஐந்து மடங்கு அளவிற்கு அதிகரிக்கக்கூடும் என்பதால், அதற்கேற்ப புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வழங்களை விரிவுபடுத்துவதும் அவசியம் என்று திரு ஜிதேந்திரசிங் தெரிவித்தார்.

[]<<<>>>[]

பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் பயன்பாட்டில் இந்தியா உலகிற்கு வழிகாட்டியாக திகழ்வதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஹைட்ரஜனில் இயங்கும் முதலாவது ட்டிரக் சரக்கு வாகன சோதனையை தொடங்கி வைத்து பேசிய அவர், 2030-ஆம் ஆண்டுக்குள் ஆண்டுக்கு ஐந்து மில்லியன் மெட்ரிக் டன் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இதன் மூலம் ஆண்டுக்கு 50 மில்லியன் மெட்ரிக் டன் கரியமில வாயு வெளியேற்றம் குறைக்கப்படுவதுடன், ஒரு லட்சம் கோடி ரூபாய் சேமிப்பு கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இத்துறையில் எட்டு லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

[]<<<>>>[]

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், இங்கிலாந்து பிரதமர் திரு கெய்ர் ஸ்டார்மரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

லண்டனில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையின்போது இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்புகளை மேம்படுத்தி மக்களிடையேயான பரிமாற்றங்களை அதிகரிப்பது குறித்து விவாதிக்கப்பட்டதாக திரு ஜெய்ங்கர் தமது சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் விவகாரத்தில் இங்கிலாந்தின் நிலைப்பாடு குறித்தும் திரு ஸ்டார்மர் எடுத்துரைத்ததாக அவர் கூறியுள்ளார்.

பின்னர் திரு ஜெய்சங்கர் இங்கிலாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு டேவிட் லாமி, உள்துறை அமைச்சர் திரு **Yvette cooper,** வர்த்தக அமைச்சர் திரு ஜோனத்தான் ரெனால்டு ஆகியோரையும் தனித்தனியே சந்தித்து பேசினார்.

**[]<<<>>>[]**

வளமான இந்தியா – பாதுகாப்பான கடற்கரை குறித்த மத்திய தொழில் பாதுகாப்புப்புப்படை விழிப்புணர்வு சைக்ளோத்தான் நிகழ்ச்சியை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா ராணிப்பேட்டை மாவட்டம் தக்கோலத்திலிருந்து நாளை மறுநாள் காணொலி வாயிலாக தொடங்கி வைக்கவுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தொழில் பாதுகாப்புப்படை ஐ ஜி திரு சரவணன், குஜராத் மாநிலம் லக்பத் கடற்கரைப் பகுதியிலிருந்து தொடங்கும் இந்த சைக்ளோத்தானில் தொழில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 14 வீராங்கனைகள் உட்பட 125 வீரர்கள் பங்கேற்பதாக கூறினார்.

11 மாநிலங்களைக் கடந்து சென்னை வழியாக இம்மாதம் 31-ஆம் தேதி கன்னியாகுமரியை சென்றடையும் என்று அவர் தெரிவித்தார்.

ஆறாயிரத்து 553 கிலோ மீட்டர் தொலைவுக்கு நடைபெறவுள்ள இந்த சைக்கிள் பயணம், தமிழ்நாட்டில் ஏழு நாட்கள் நடைபெறவிருப்பதாகவும், பொதுமக்களும் இதில் பங்கேற்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடலோரப் பகுதிகளில் போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தல் தடுப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துகம் நோக்கில் இந்த சைக்ளோத்தான் நடைபெறுவதாக திரு சரவணன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் புதுதில்லியில் நேற்று பெல்ஜியம் இளவரசி திருமதி **Astrid** -யை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது தூய்மையான தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் மின்னணு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக திரு அஸ்வினி வைஷ்ணவ் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் கிராமப்பகுதிகளில் யு பி ஐ பண பரிமாற்றத்தால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக மகளிருக்கான மாதிரி கிராம பஞ்சாயத்துக்களை மத்திய பஞ்சாயத்துராஜ் அமைச்சகம் இன்று தொடங்குகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதிரி மகளிர் கிராம பஞ்சாயத்துக்கள் அமைய வேண்டும் என்ற முதன்மையான நோக்கத்துடன் இந்த திட்டம் கொண்டுவரப்பட உள்ளது.

புதுதில்லியில் நடைபெறும் பஞ்சாயத்துராஜ் இணை அமைச்சர் திரு எஸ் பி சிங் பாதல், சுகாதாரத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல் மற்றும் பல்வேறு அமைச்சகங்களின் பிரதிநிதிகள், சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

[]<<<>>>[]

காசா பகுதி மறுசீரமைப்புக்கான எகிப்து நாட்டின் திட்டத்திற்கு அரபு நாடுகளின் தலைவர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர்.

இஸ்ரேல் தாக்குதல் காரணமாக காசா பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 20 லட்சம் பாலஸ்தீனியர்களை மறு குடியமர்த்த 53 பில்லியன் டாலர் மதிப்பீட்டில் இந்த மறுசீரமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக கெய்ரோவில் நடைபெற்ற அரபு நாடுகளின் அவசரக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா பகுதியை அமெரிக்கா தனது பொறுப்பில எடுத்து சீரமைக்கும் என அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் அறிவித்திருந்த நிலையில், அரபு நாடுகள் இந்த புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளன.

[]<<<>>>[]

பாகிஸ்தானின் கைபர் பக்துங்குவா மாகாணத்தில் தற்கொலைப்படை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் நான்கு குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்தனர்.

பன்னு கண்டோன்மென்ட் பகுதியில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலுக்கு ஜெய்ஸ் அல் ஃபர்ஸ்சான் என்ற தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.

இந்த தாக்குதலின்போது ராணுவ கண்டோன்மென்டுக்குள் நுழைய முயன்ற ஆறு தீவிரவாதிகளை ராணுவம் சுட்டுக் கொன்றது.

[]<<<>>>[]

கிறிஸ்தவர்களின் தவக்காலமான சாம்பல் புதன் இன்று தொடங்குகிறது.

40 நாட்கள் நடைபெறும் இந்த தவக்காலத்தின் போது தேவாலயங்களில் சிறப்பு பிரார்தனைள் நடைபெறவுள்ளது.

இதன் நிறைவாக ஏசுபிரான் உயிர்த்தெழுந்த தினம் ஈஸ்டர் பண்டிகையாக கொண்டாடப்படும்.

[]<<<>>>[]

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் தென்னாப்பிரிக்கா – நியுசிலாந்து அணிகள் மோதுகின்றன.

இப்போட்டி லாகூரில் பிற்பகல் மணி 2-30-க்கு தொடங்குகிறது.

முன்னதாக துபாயில் நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் இந்தியா நான்கு விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 49 புள்ளி மூன்று ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 264 ரன் எடுத்தது,

265 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்தியா 48 புள்ளி ஒரு ஓவரில் ஆறு விக்கெட் இழப்புக்கு 267 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

**[]<<<>>>[]**

குருகிராம் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ராஷ்மிகா – வைதேகி சௌத்திரி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முன்தைய சுற்றில் இந்த இணை 4-6, 7-6, 10-3 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் **Priska Madelyn.** ஜப்பானின் **yamazaki** இணையை வென்றது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கோவா அணி இரண்டு – பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் மொகமதன் அணியை வென்றது.

இன்றைய போட்டியில் ஜாம்ஷெட்பூர் அணி – ஒடிஸா அணியை எதிர்கொள்கிறது.

இப்பேட்டி ஜாம்ஷெட்பூரில் இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

***End of News***